1993 பிப்ரவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

22—

உதகை கிளைச் சிறைச்சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

*11685—திரு. எச்.எம். ராஜு :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகையிலுள்ள கிளைச் சிறைச் சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) நேர்வு எழவில்லை.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது நமது நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகையிலுள்ள கிளைச் சிறைச்சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்று கூறிவிட்டார்கள். உதகை கிளைச் சிறைச்சாலையானது, அந்த மாவட்டத்திலுள்ள கட்டிடங்களில் மிகவும் பழமையான கட்டிடமாகும். அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. குற்றவாளிகளுக்கும் மற்றும் குற்றவாளிகள் என்று கருதப்படும் 'அண்டர் டிரையல்ஸ்' - களுக்கும் மற்ற சிறைச் சாலைகளிலுள்ள வசதிகள் அங்கே இல்லை. பெண் குற்றவாளிகளும் அதே சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அங்கே 35 பேர்களுக்கு மேல் தங்க வசதி எதுவும் இல்லை. அங்கே உள்ள சிறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், மற்ற பணியாளர்களுக்கும் கூட அத்தியாவசியமான வசதிகள் இல்லாத நிலை

உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் தற்போது அரசு கட்டி வரும் நவீன சிறைச்சாலை களைப் போன்ற ஒன்றை அங்கே உருவாக்க, உத்திரவு பிறப்பிக்க வழி வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-05

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக இருப்ப தாலும், இரவு தட்பவெட்ப நிலை தற்போது உள்ளது போல், 3 டிகிரி செல்சியசாக சில மாதங்களில் இருப்பதாலும், அங்கு தங்கவிருக்கும் மக்களுக்கு விசேஷ அவசியமான சலுகை என்ற அடிப்படையில், சமவெளிப் பிரதேசத்திற்கு மாறுபட்ட வகையில், சிறைச்சாலை அமைக்கப்படுமா? எப்போது அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி சிறைச்சாலையில், தரை யில் மரப்பலகை பதிப்பதற்காக 36 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அதற்குச் செலவிட செயற்குறிப்பை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

23 —

சிவகாசியை தனி வட்டமாக அமைத்தல்.

*11121 — திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து சிவகாசியை தனித் தாலுக்காவாக அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?